ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1892/34 - 2014 දෙසැම්බර් මස 10 වැනි බදාදා - 2014.12.10
1892/34 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டம்**

அரசியலமைப்புச் சட்டத்தின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் துணை உறுப்புரை மற்றும் 1985ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தினாலும், 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கத்தைக் கொண்ட இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உபபிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அந்தச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

கொழும்பு,
2014, திசெம்பர் 08.

**ஒழுங்குவிதிகள்**

2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதிய 1844/49 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் இதன் மூலம் தொடர்ந்தும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

அதன் பிரகாரம், அட்டவணை I (அ) மற்றும் (ஆ) இல் உள்ளடங்கியுள்ள பின்வரும் விடயங்களுக்காக இறக்குமதியில் 2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி (தரநிர்ணயம் மற்றும் தரக் கட்டுப்பாடு) கட்டளையை செயல்வலுப்படுத்துவது உடனடியாக நடைமுறைக்குவரும் விதமாக நீக்கப்படுகின்றது.

| தலைப்பு | எச். எஸ் குறியீட்டு இலக்கம் | III ஆவது நிரல் விடயங்கள் | IV ஆவது நிரல் இலங்கைத் தரங்கள் |
|---|---|---|---|
| 17 | 1701.14 | கரும்பு வெல்லம் | இலங்கைத் தரங்கள் 883 கரும்பு வெல்லத் திற்கான தரங்களின் நியமக் குறியீடு |
| 118 | 1701.99.10 | வெள்ளைப் பளிங்குருவான கரும்பு வெல்லம் | இலங்கைத் தரங்கள் 191 கரும்பு வெல்லத் திற்கான தரங்களின் நியமக் குறியீடு |
| 119 | 1713.40.11<br>1713.40.12 | மைசூர் பருப்பு (சிவப்புப் பருப்பு) | இலங்கைத் தரங்கள் 883 கரும்பு வெல்லத் திற்கான தரங்களின் நியமக் குறியீடு |

12- 891


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.